இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக்கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக்கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர்; கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர்; பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். (மத் 13:47-50)

# தொடர்ந்து இறைவார்த்தையையும் நன்மைகளையும் விதைத்துச் செல்வோம்!

## திருத்தந்தை வலியுறுத்து

**வத்திக்கான்:** பல வேளைகளில் சிரமமாகத் தோன்றினாலும், இயேசுவின் மாதிரிகையைப் பின்பற்றி தொடர்ந்து நன்மைகளை விதைத்துச் செல்வோம் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.



ஜூலை 16, ஞாயிற்றுக்கிழமையன்று வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு நண்பகல் மூவேளை செபவுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாளின் நற்செய்தி வாசகமான விதை விதைப்பவன் உவமை குறித்து தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இறைவார்த்தையை விதைக்கும் பணியை ஒருபோதும் நிறுத்தவேண்டாம் என திருப்பயணிகளிடம் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் மனம் என்னும் நிலம் குறித்து தெளிவாகத் தெரிந்திருந்தும் நாம் கொடுக்கும் கனிகள் அபரிவிதமாக இருக்கும் எனற நம்பிக்கையிலேயே இயேசு விதைகளை நம்மில் விதைக்கிறார் என எடுத்துரைத்தார்.

இறைவார்த்தையை ஏற்றுக்கொள்வதோ அல்லது மறுப்பதோ என்ற சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் இருப்பினும் நம் இதயம் என்னும் நிலம் எப்போதும் நற்கனிகளை பெருமளவில் கொடுக்கும் என்ற அசையா நம்பிக்கையிலேயே இயேசு இறைவார்த்தை என்னும் விதைகளை விதைக்கிறார் என மேலும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தாராளமனத்துடன் விதைகளை விதைக்கும் நல்விதைப்பவரான இயேசு, பாறைகள் நடுவிலும், முட்புதர்கள் நடுவிலும் அவ்விதைகள் விழுந்து வளரமுடியாத நிலைகள் உருவாகும் என்பதை அறிந்திருந்தும், நம் மனம் என்னும் நிலத்தின் செழுமையில் நம்பிக்கை வைத்து இயேசு தொடர்ந்து விதைத்துக் கொண்டிருக்கிறார் எனவும் கூறினார் திருத்தந்தை.

தங்கள் விசுவாசப் போதனைகளைச் செவிமடுக்காமல் செயல்படும் குழந்தைகள் குறித்து பெற்றோர் கவலை கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை, ஒவ்வொரு குழந்தையிலும் விதைக்கப்பட்டுள்ள விதை, அதற்குரிய காலத்தில் வேர்விட்டு முளைக்கும் என்பதில் நம்பிக்கைக் கொள்வோம் என கேட்டுக்கொண்டார்.

விதைப்பவர் உவமையின் அடிப்படையில் இளையோரை நோக்கியும் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோர் ஆற்றும் சிறிய உதவிகள் கூட விதையாக மாறி பெரும் கனிகளை வழங்க வல்லது என தெரிவித்தார்.

செபம், பிறருக்கு நெருக்கமாக இருத்தல், பிறர் பணிக்காக நேரம் ஒதுக்குதல் போன்றவை, நுகர்வுக்கலாச்சாரத்தின் வெறுமையிலிருந்து நம்மை காக்க வல்லவை என இளையோரை நோக்கிக் கூறினார் திருத்தந்தை.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்*




# உலக இளையோர் நாள்

உலக இளையோர் நாள்(World Youth Day) என்பது இளைஞர்களுக்கான நிகழ்வாகும். இது பெரும்பாலும் கத்தோலிக்க திருஅவையின் நிகழ்வாகக் கருதப்பட்டாலும், அனைத்துலக இளைஞர்களும் இன, சமய பேதமின்றி பங்கேற்க அழைக்கப்படுகின்றனர்

உலக இளையோர் நாள் 1984-ஆம் ஆண்டு, திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முன்னெடுக்கப்பட்டது. இது ஆண்டுதோறும் மறைமாவட்ட அளவில் இடம்பெறும். அதை விட மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அகில உலக ரீதியில் ஒரு-வார நிகழ்வாக வெவ்வேறு நாடுகளில் இடம்பெறுகிறது. பன்னாட்டு நிகழ்வுகளில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் உலகின் பல நாடுகளிலும் இருந்து வந்து கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நோக்கம்

பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்து இளைஞர்கள் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்பதே உலக இளையோர் தினத்தின் நோக்கம் என்று போர்ச்சுக்கல், லிஸ்பனின் உதவி ஆயர் Bishop Américo Aguiar அவர்கள் கூறினார். இவ்வாண்டு உலக இளையோர் தினம் போர்ச்சுக்கல், அன்னை மரியா காட்சியளித்த நகரான லிஸ்பில் அடுத்த வாரம் ஆகஸ்டு முதல் திகதியிலிருந்து 6-ம் திகதி வரை ஒரு வாரக் காலத்திற்க்கு, பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளது.

### கருப்பொருள்

மரியா புறப்பட்டு விரைந்து சென்றார் (லூக் 1:39)

### மலேசியா இளையோர் படை

ஒவ்வொரு மறைமாவட்ட இளைஞர் அலுவலகமும் அந்தந்த மறைமாவட்டங்களில் திருப்பலி ஆசீருடன் தங்களது இளையோர் படையை அனுப்பவுள்ளது.

இந்நிகழ்வுக்கு மலேசியாவின் ஒன்பது மறைமாட்டங்களிலிருந்து பின்வரும் எண்ணிக்கையிலன இளையோர் உலக இளையோர் தினக் கொண்டட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

1. கெனிங்ஙாவ் மறைமாவட்டம் –7
2. கோத்தா கினபாலு மாமறைமவட்டம் –6
3. கோலாலம்பூர் மாமறைமாவட்டம் 45
4. கூச்சிங் மாமறைமாவட்டம் 16
5. மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம் 20
6. மிரி மறைமாவட்டம் 9
7. பினாங்கு மறைமாவட்டம் 37
8. சண்டக்கான் மறைமாட்டம் 9



# மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் ஆண்டு கூட்டம் (MCC) சரவாக்கில் நடைபெற்றது

## தீர்மானங்களும் முடிவுகளும்

மிரி, சரவாக்: மலேசிய மறைக்கல்வி ஆணையம் (Malaysian Catechetical Commission, MCC) அதன் ஆண்டுக் கூட்டத்தை சரவாக்கின் மிரியில் 2023 ஜூலை 3 முதல் 7 வரை நடத்தியது. இந்தக் கூட்டத்திற்கு கோலாலம்பூர் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தலைமை வகித்தார். கோலாலம்பூர், கோத்தா கினபாலு மற்றும் கூச்சிங் ஆகிய மாமறைமாவட்டங்களிலிருந்தும், கெனிங் காவ், மலாக்கா-ஜோகூர், மிரி, பினாங்கு, சண்டகன் மற்றும் சிபு ஆகிய மறைமாவட்டங்களிலிருந்தும் அருள்தந்தையரும் துறவற சபையாரும், பொது நிலையினரும் சிங்கப்பூர் மாமறைமாவட்டத்தின் தேசிய மறைக்கல்வி அலுவலகத்தின் பார்வையாளர்களோடு புருணையின் திருத்துது மறைவட்ட பொறுப்பாளரும் பங்கேற்றனர்.

இந்த வருடாந்திர கூட்டம் ஒவ்வொரு மறைமாவட்டத்தின் மறைக்கல்வி பணிக்குழுக்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் தோழமையை வளர்க்கிறது என்று கூறப்படுகிறது.



மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு மறைக்கல்வி துறைக்கு ஆலோசனை அமைப்பாக நிறுவப்பட்டதுதான் இந்த மறைக்கல்வி ஆணையம். இது மலேசியா முழுவதும் உள்ள ஒன்பது மறைமாவட்டங்களில் இருந்து ஓர் அருள்பணியாளர் மற்றும் ஒரு பொதுநிலையினர் ஆகிய பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு மேய்ப்புப்பணி ஆணையமாகும்.

### கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட சில முக்கிய அம்சங்கள்

பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தொடக்க உரையுடன் கூட்டம் தொடங்கியது, இன்றைய இளைஞர்களுக்கான மறைக்கல்வியின் ஏற்புடைமை குறித்து பல முக்கிய கேள்விகளை முன்வைத்தார். மறைக்கல்வி ஆசிரியர்களை முன்மாதிரியாகக் கொண்ட மறைக்கல்வி இப்போது தேவைப்படுகிறது என்றும், அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவும் இணைந்து பயணிக்கவும் தயாராக இருக்கிறார்களா? என்றும் வினவினார். தொடர்ந்து இந்த ஆணையத்தின் தற்போதைய தலைவரான டாக்டர் ஸ்டீவன் செல்வராஜூ, பங்கேற்பாளர்களை மேற்கண்ட கேள்விகளைப் பற்றி சிந்திக்கவும், அவர்களின் எண்ணங்களையும் பதில்களையும் கூட்டத்துடன் பகிர்ந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

ஒவ்வொரு மறைமாவட்டத்தின் சூழல் மிகவும் வித்தியாசமாக இருந்தபோதிலும், கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலானோர் நேர்மறையான பதிலைக் கொடுத்தனர்: இளைஞர்கள் இன்னும் வாழ்க்கை மற்றும் கடவுளுடனான உறவு பற்றிய போதிய புரிந்துணர்வு பற்றிய அதே கேள்விகளைக் கேட்கிறார்கள் என்றும், ஆனாலும் இன்றைய மறைக்கல்வியின் தாக்கம் மற்றும் அணுகுமுறை இளையோரின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வண்ணம்



இருப்பதாகவும். கோட்பாடுகளை மட்டும் அர்த்தமில்லாமல் திணிப்பதாக இல்லை என்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்தந்தை டேவிட் அருளானந்தம் அவர்கள் மேலும் கூறுகையில், நம்பிக்கை வாழ்வுக்கு சாட்சியாக, மறைக்கல்வி ஆசிரியர்கள் பள்ளியைப் போன்ற வகுப்பை மட்டும் போதிப்பதில்லை, மாறாக கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றி, இளைஞர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தி, இயேசுவாக முதிர்ச்சி நோக்கி வளர ஊக்குவிப்பதாக மறைக்கல்வி உள்ளதாகக் கருத்துரைத்தார்.

இக்கூட்டத்தின் எழுப்பப்பட்ட முக்கிய விவாதங்களுக்குப் பின் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளில் ஒன்று, 2024 ஆம் ஆண்டில் மறைக்கல்வியில் கவனம் செலுத்துவதாகும். இது மலேசிய ஆயர் மேய்ப்புப்பணி பேரவை (MPC) 2026 க்கு வழிவகுக்கும் நான்கு முக்கிய பகுதிகளுடன் இணைக்கப்பட்டவுள்ளது. "நாங்கள் கடவுளின் படைப்பின் பராமரிப்பாளர்கள்' என்பதோடு, 'உங்களுள் ஒவ்வொருவருக்கும் தாம் பெற்றுக் கொண்ட அருள்கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணி புரியுங்கள்' (1 பேதுரு 4:10) என்பதையும் இணைத்து 2024-ம் ஆண்டிற்கான மறைக்கல்வி கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது "கடவுளின் பலவிதமான அருள்களுக்கேற்ப நல்ல அருள்களைக் கொண்டு நீங்கள் ஒவ்வொருவரும் பெற்ற கொடைகளை ஒருவருக்கொருவர் சேவை செய்ய பயன்படுத்துங்கள்."எனும் கருப்பொருள் உருவாக்கப்பட்டது.

நிறைவாக, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் நிறைவு கருத்துப் பகிர்வுடன் கூட்டம் நிறைவுற்றது, அவர் பங்கு பெற்றவர்களின் பொதுவான எண்ணத்தை எதிரொலித்தார். மறைக்கல்வி என்பது வாழ்நாள் செயல்முறையாகும், இது ஒரு நிகழ்வு அல்லது நிகழ்ச்சி நிரலை நிறைவடையச் செய்வதல்ல. விசுவாசிகளில் அதிகமானோர் மறைக்கல்வி எனும் சிறப்பு பணிக்கு ஈர்க்கப்பட வேண்டும் என்றும், அவர்களின் உருவாக்கத்திற்கு முழு மனதுடன் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இறுதியாக, அவர் மறைமாவட்டங்களுக் கிடையிலும் அவற்றிற்குள்ளும், திருஅவையின் பல்வேறு பணிக்குழுக்களுடனும் அனுபவத்தை வளப்படுத்தவும், உறவுகளை ஆழப்படுத்தவும், மிக முக்கியமாக, முழு கிறிஸ்தவ சமூகத்தைப் படைப்பதும் மறைக்கல்வி பணிக்குழுவின் பணி என்பதால், அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

அடுத்தக் கூட்டம் கோத்தா கினபாலுவில்



ஜூன் 2024-ல் நடைபெற முடிவெடுக்கப்பட்டது.

*-செய்தி தமிழாக்கம்-ஆர்.கே.*

# உலகப் பற்றை விடுவோமானால் விண்ணரசு நமதே!

இன்று ஆண்டின் பொதுக்காலம் 17 ஆம் ஞாயிறின் வாசகங்கள் அனைத்தும் ஞானத்தைப் பற்றியும், மிகப்பெரும் கருவூலமான இறைச்சட்டத்தின் மீது நாம் கொண்டிருக்க வேண்டிய ஆழ்ந்த பற்றுதலைப் பற்றியும், விண்ணகப் புதையலைக் கைக்கொள்ள எதையும் நாம் இழக்கலாம் என்றும் அறிவுறுத்துகிறன. இவை அனைத்திற்கும் நமக்குத் தேவை இறைவன் தரும் ஞானம் என்னும் கொடையே.

இன்றைய முதல் வாசகத்தில் சாலமோன் அரசர் கடவுளாகிய ஆண்டவரிடம் மக்களை நீதியில் வழிநடத்த உதவியாக இருக்கும் ஞானத்தைக் கேட்கிறார். கடவுள் அவர் கேட்ட ஞானத்தையும் கொடுத்து, அவர் கேட்காத செல்வத்தையும், நாடுகளையும், புகழையும் அவருக்குத் தருகிறார். இது போன்று ஆண்டவரைத் தேடும் ஞானமும், அறிவும் தான் நாம் தேட வேண்டிய செல்வங்கள் என்று முதல் வாசகம் நினைவூட்டுகிறது.

இன்றைய திருப்பாடலில் ஆசிரியர் பொன்னை விட ஆண்டவரின் திருச்சட்டத்தில் பேரார்வம் கொண்டுள்ளதாகப் பாடுகிறார். கண்முன்னே இன்பம் தரும் பொன்னைவிட, ஆண்டவரின் திருச்சட்டத்தில் மனநிறைவைக் காண்பதாகப் பாடுகிறார். உலகப் பற்று ஒருநாள் அற்றுப்போய்விடும். ஆனால் அது எப்போது அற்றுப்போகும்? அந்த நாள் என்னுடைய இறுதிநாளாக இருந்தால், நான் அடையப்போகும் அழியாச்செல்வமாகிய விண்ணகப்பேற்றை நான் இழந்தவனாகிவிடுவேன். எனவே இந்த என் வாழ்நாளிலே உலகப்பற்றை விடுத்து, நிலைவாழ்வைப் பற்றிக்கொள்ளும் ஞானம் எனக்குத் தேவை என்று கூறுகிறார்.

பவுல் தம்முடைய கடிதத்தில் நம் அனைவரையும் இறைவன் முன் குறித்து வைத்துள்ளார். அவரே அழைத்தார், தமக்கு ஏற்புடையவர்களாக அவர் தான் மாற்றினார். அவருடைய மாட்சியிலும் பங்குபெறச் செய்தார் என்று உன்னத கடவுளின் ஞானத்தையும், அவர் நமக்கென முன்னரே வகுத்திருக்கும் திட்டத்தையும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றார்.

நற்செய்தியில் இயேசு, விண்ணரசைப் பற்றி சீடர்களுக்குப் போதித்தபின், இவற்றையெல்லாம் புரிந்துகொண்டீர்களா என்று கேட்கும்போது சீடர்கள் "ஆம்" என்று கூறினார்கள். விண்ணரசு என்னும் கருவூலத்தைப் பற்றி நாம் எவ்வளவு அறிந்துகொண்டுள்ளோம்? அதை உரிமையாக்கிக் கொள்வதற்கு எதை விலையாக கொடுப்போம்? உலகப் பார்வையில் மதிப்புமிக்க செல்வங்களா? எதைக் கொண்டு வாங்குவோம்? சிந்திப்போம். உலகமெல்லாம் உரிமையாக்கிக்கொண்டாலும், இறைவனிடம் ஒப்படைக்கவேண்டிய செல்வமான நம் ஆன்மாவை இழந்துவிட்டால், எதைக் கொண்டு மீண்டும் அதை வாங்க முடியும்? இதைத் தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்; இந்த ஞானத்தை நாம் தேடவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகின்றார்.

இன்று நாடு முழுவதும் உள்ள கத்தோலிக்கர்கள் புனித சுவாக்கின் அன்னம்மா திருவிழாவைக் கொண்டாட பல புகழ்பெற்ற தலங்களுக்கு சென்று தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுகிறார்கள். நம்முடைய நம்பிக்கை இந்தப் புனிதர்களோடு நின்றுவிடுகின்றதா? அல்லது அழியாப் புதையலான, அன்பையும், மன்னிப்பையும், அருளையும் தன்னகத்தே வைத்திருக்கும் கருவூலமான உன்னதக் கடவுளையும், இவரிடமிருந்து தான் புனிதர்கள் நாம் மன்றாடும் உதவியைப் பெற்று நமக்குத் தருகிறார்கள் என்னும் புரிந்துணர்வையும் நாம் பெற்றுள்ளோமா? வலையிலிருந்து நல்லனவற்றை எடுத்துக் கொண்டு, கெட்டவற்றை வெளியே எறிந்துவிடும் ஞானம் நமக்குத் தேவை. இன்றைக்கு நம்மால் இறைவன் அளிக்கக்கூடிய விண்ணரசைப் பெறுவதற்கு நம்மிடம் இருக்கின்ற உலகு சம்பந்தப்பட்ட ஆசைகளை, காரியங்களை, செல்வங்களை இழக்கத் தயாராக முடிகிறதா? அல்லது நம்மையே நாம் இழக்கத் தயாராக முடிகிறதா? சிந்திப்போம் வாழ்வு பெறுவோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின் பொதுக்காலம் 17-ம் ஞாயிறு**

1-ம் வாசகம் 1 அர 3: 5, 7-12
பதி.பாடல் 119:57,72.76-77.127-128.129-130
2வது வாசகம் உரோ 8: 28-30
நற்செய்தி மத்தேயு 13: 44-52

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**